4. உரிமை மீறல் பிரச்சனை

'' தினமலர் '' நாளிதழ் மீது (அவை நடவடிக்கைகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள செய்தி குறித்து)—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் அவர்கள் சட்டப் பேரவையில் 31-3-1990-ஆம் நாளன்று, திருநெல்வேலிப் பதிப்பு 21-3-1990 தேதிய தினமலர் நாளிதழில் 20-3-1990 சட்டப் பேரவை நடவடிக்கைகளைத் திரித்துப் பிரசுரித்துள்ளது என்று அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினை எழுப்பினார். அதற்கு நான், நாளிதழ் ஆசிரியரிடமிருந்து விளக்கம் பெற்று என்னுடைய தீர்ப்பினை அளிப்பதாகக் குறிப்பிட்டிருந்தேன். 'தின மலர்' நாளிதழ் ஆசிரியர், தனது 6-4-1990 நாளிட்ட கடிதத்தில் கீழ்க் கண்டவாறு தெரிவித்துள்ளார் :

10-40 மணி

''21–3–1990 ஆம் நாளிட்ட நெல்லைப் பதிப்பு தினமலர் இதழில் வெளியான திரு. குமரி அனந்தன் பேச்சு தொடர் பாக 31–3––1990 அன்று சட்டப் பேரவையில் திரு. கதிரவன் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றி அதே நாளில் எமது நிருபர்கள் என் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். மேற்படி செய்தியில் பாண்டியனும் அ.தி.மு.க. உறுப்பினரும் என்பதற்கு மாறாக பாண்டியனும் தி.மு.க. உறுப்பினர்கள் என்ற சொற்கள் இடம் பெற்று உள்ளன. சென்னையிலிருந்து தொலை அச்சு 'டெலிபிரிண்டர்' மூலம் இச்செய்தியை எமது இதர பதிப்புகளுக்கு அனுப்பும் போது நெல்லை தொலை அச்சில் மட்டும் 'அ' என்ற எழுத்து விடப்பட்டதால் இப்பிழை நேர்ந்துள்ளது என்று விசாரணை மூலம் அறிந்தேன். மற்றப் பதிப்புகளில் இப்பிழை இடம் பெறவில்லை. எனினும் தவறுக்குப் பொறுப்பேற்று உடனடியாக இந்த விளக்கத்தை 'வாசகர்களின் கவனத்துக்கு' என்று தலைப்பிட்டு 1–4–1990 ஆம் நாளிட்ட இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கடிதம் வரும் வரையில் காத்து இராமல், அவையில் பிரச்சினை எழுப்பப்பட்ட மறுநாளே, நெல்லை பதிப்பு மட்டுமின்றி சென்னை, ஈரோடு, திருச்சி, மதுரை ஆகிய பதிப்புகளிலே விளக்கம் அளித்ததன் மூலம் திரு. கதிரவன் கருதுவது போல் தி.மு. கழக உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்கும் நோக்கம் எமக்கு எள்ளளவும் இல்லை என்று தெளிவாக்க விரும்புகிறேன். செய்திகளில் ஏற்பட்ட பிழையால் யார் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அதற்காக வருந்துகிறேன்'' என்று

குறிப்பிட்டார்கள். இதழ் ஆசிரியர் தவறு எப்படி நேர்ந்தது என்று விளக்கியதுடன் தவறுக்கு வருத்தம் தெரிவித்து அந்தச் செய்தியும் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதால் இப்பிரச்சினை இத்துடன் முடிக்கப்படுகிறது.

5. 113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை.

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அதுபற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 113-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் ஓர் அறிவிப்பினைத் தந்து இருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை இப்போது அவையில் வைப்பார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்னுரை, விளக்க உரை எல்லாம் கிடையாது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் அதனை அப்படியே படிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நேற்று-அதாவது நான் எழுதிய கடிதத்தின் செய்தியை வைத்து 12-4-1990 காலை நானும் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கன்குடி கோயிலில் நடைபெற்ற கோயில் திருவிழாவையொட்டி அங்கே சென்றிருந்த நத்தத்துப் பட்டி தேவர் பெருமக்கள் சிலர் ஒரு கடையிலே தொப்பி வாங்க முனைந்தபோது அங்கே இருந்த ஆதிதிராவிடர்களோடு தகராறு ஏற்பட்டு இருக்கிறது: தகராறுக்கு இது காரணம் என்றார்கள். ஆனால் அதே நாள் தமது துறையின் மானியக் கோரிக்கை மீது பேசிய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இருக்கன்குடியைப் பொறுத்தவரையிலும் சிக்கல்கள், தகராறுகளுக்கு எல்லாம் காரணம்—நான் நினைப்பது—அங்கே ஏதோ சாதிக் கலவரம், எப்படியோ தொப்பி வாங்கப் போன இடத்தில் அது ஏற்பட்டது என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால் அதைவிட ஒரு ஆழமான ஒரு காரணம் இருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன் என்றும், இந்தப் பிரச்சினை வந்த பிறகு அவர்கள் அதாவது முதல்வர் அறிக்கை தயாரித்த பிறகு இதைப் பற்றி பேசவில்லை; பேசி இருந்தால் நான் அவர்களிடத்திலே